

பாடம் 3

ஜனவரி 11-17

# மறைபொருளிலிருந்து வெளிப்பாட்டுக்கு

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *தானி 2:1-16; அப் 17:28; தானி 2:17-49; சங் 138; யோவான் 15:5; உபா 32:4; 1பேதுரு 2:4.*

**மனன வசனம்:** பின்பு தானியேல் சொன்னது: தேவனுடைய நாமத்துக்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரமுண்டாவதாக; ஞானமும் வல்லமையும் அவருக்கே உரியது. தானியேல் 2:20.

கிரீன்லாந்தைச் சுற்றிலுமுள்ள நீர் நிலைகளில் பல அளவிலான பனிப்பாறைகள் உள்ளன. சிலசமயங்களில் சிறிய பனிப்படிவுகள் ஒரு திசையிலும் பெரிய பனிப்பாறைகள் அதற்கு நேர் எதிர்த் திசையிலும் இழுத்துச் செல்லப்படுவதுண்டு. காரணம் என்னவென்றால், மேற்பரப்பில் வீசும் காற்றானது சிறிய பனிப்படிவுகளை இழுத்துச் செல்கின்றன; ஆழ்கடல் நீரோட்டங்கள் பெரிய பனிப்பாறைகளை நகர்த்துகின்றன. வரலாற்றில் தேசங்களின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் மேற்பரப்பு காற்றுக்கும் ஆழ்கடல் நீரோட்டத்திற்கும் ஒப்பிடலாம். மனிதரின் சித்தத்தைப் போல கணிக்க முடியாத, மாறும் இயல்புள்ள அனைத்தையும் காற்று சுட்டிக்காட்டுகிறது. காற்றும் புயலும் வீசினாலும் கூடவே பலத்த ஆற்றலுடன் செயல்படுகிற ஒரு வல்லமையை ஆழ்கடல் நீரோட்டம் சுட்டிக்காட்டுகிறது. தேவனுடைய ஞானமான, உன்னத நோக்கங்களின் செயல்பாடுதான் அந்த ஆற்றல். 'தங்களுக்கு நியமிக்கப்பட்ட மிகப் பிரமாண்டமான சுற்றுப்பாதையில் செல்கிற நட்சத்திரங்கள் போல, தேவனுடைய நோக்கங்கள் தாமதிப்பதுமில்லை, அவசரப்படுவதுமில்லை' என்று எலன் ஒய்ட் சொல்கிறார். *DA 32.* ராஜ்யங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும், கருத்தியல்களும் அரசியல் கட்சிகளும் மனிதர்களுடைய தீர்மானங்களால் மட்டுமே உருவானதுபோலத் தோன்றலாம்; ஆனால், பரலோகத்தின் தேவன்தாம் வரலாற்றை ஒரு முடிவைநோக்கி நகர்த்துகிறாரென தானியேல் 2 காட்டுகிறது.

*2020, ஜனவரி 18 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# நெருக்கமாயிருக்கும் தேவன்

**கேள்வி: ராஜாவுக்கு ஆண்டவர் கொடுத்த தரிசனத்தால் அந்த எபிரெயர்களுக்கு நேர்ந்த நெருக்கடி என்ன? தானியேல் 2:1-16.**

முற்காலத்தில் சொப்பனங்களை எளிதாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள். தீயசொப்பனம் என்றால், ஏதோ அழிவு வரப்போவதாகப் பயப்படுவார்கள். அதனால்தான் சொப்பனம் கண்டு, அது மறந்தும் போனதால்அதைஅறிந்துகொள்ளநேபுகாத்நேச்சார்பதைபதைக்கிறான். சொப்பனங்களுக்கு தேவர்கள் அர்த்தம் சொல்லமுடியுமென பாபிலோனிய நிபுணர்கள் நம்பினார்கள்; ஆனால் தானியேலில் சொல்லப்படும் அந்தச் சொப்பனத்தை ராஜா மறந்துபோனதால் நிபுணர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. சொப்பனம் என்னவென்பது தெரிந்து விட்டால், ஏதாவது அர்த்தம்சொல்லி ராஜாவைச் சமாதானப்படுத்தி விடலாம். ஆனால் இப்போது ராஜா கண்ட சொப்பனம் என்னவென்று நிபுணர்களுக்குத் தெரியாததால், “ராஜா கேட்கிற காரியம் மிகவும் அருமையானது; மாம்சமாயிருக்கிறவர்களோடே வாசம்பண்ணாத தேவர்களேயொழிய ராஜசமுகத்தில் அதை அறிவிக்கத்தக்கவர் ஒருவரும் இல்லை” என்று சொல்லவேண்டியதாயிற்று. தானி 2:11.

எரிச்சலடைந்த ராஜா, பாபிலோனின் ஞானிகளைக் கொல்லக் கட்டளையிடுகிறான். பண்டைய உலகில் அத்தகைய அராஜகப்போக்கு சாதாரணம்தான். வரலாற்றுப் பதிவு சொல்வது என்னவென்றால், சதித் தீட்டம் தீட்டியதற்காக ஞானிகள் அனைவரையும் முதலாம் தரியு கொன்றிருக்கிறான்; பாலம் ஒன்று இடிந்ததற்காக அதைக் கட்டின பொறியாளர்களை அகாஸ்வேரு கொன்றிருக்கிறான். தானியேலும் அவன் நண்பர்களும் பயிற்சி முடிந்து, ராஜாவின் நிபுணர் குழுவில் இடம்பெற்றிருந்த சமயத்தில்தான் ராஜா அவ்வாறு கட்டளையிடுகிறான். அதனால்தான் அவர்களும் அந்தக் கட்டளையால் பாதிக்கப்படும் நிலையில் இருந்தார்கள். மூலபாஷையை வாசித்தால், கொலைப்படலம் உடனே ஆரம்பித்தாகவும், அடுத்து தானியேலும் அவனது நண்பர்களும்தான் கொல்லப்பட இருந்ததாகவும் தெரிகிறது. ஆனால் தானியேல், அந்தக் கட்டளையை நிறைவேற்றும் பொறுப்பிலிருந்த ஆரியாகோடே ‘ஞானமும் புத்தியுமாய்ப்’ பேசுகிறான். தானி 2:14. பிறகு, மறைபொருளை விளக்குவதற்கு ராஜாவிடம் கால அவகாசம் கேட்கிறான். ‘கால தாமதம்பண்ணப் பார்க்கிறீர்கள்’ என்று சாஸ்திரிகளைக் குற்றஞ்சாட்டின ராஜா, தானியேலுக்கு உடனே ‘காலஅவகாசம்’ கொடுக்கிறான். சாஸ்திரிகள் சொன்னதுபோல, அதற்கான விடை எந்த மனிதனுக்கும் தெரியாதென்பது தானியேலுக்கும் தெரியும். ஆனால், கனவையும் அர்த்தத்தையும் வெளிப்படுத்த வல்ல தேவன் ஒருவரையும் அவனுக்குத் தெரியும்.

தேவன் ‘நெருக்கமாயிருப்பவர்’ என்று இறையியல் வல்லுநர்கள் சொல்கிறார்கள். சிருஷ்டிகளிடமிருந்து வேறுபட்டவராக இருந்தாலும், சிருஷ்டிகளோடு நெருக்கமானவராக தேவன் இருக்கிறார். நேபுகாத்நேச்சாருக்கு கொடுத்த சொப்பனத்தில் இது எவ்வாறு வெளிப்படுகிறது? அப் 17:28ஐயும் வாசிக்கவும்.

# ஜெபம்

தானியேல் உடனே தன் நண்பர்களை அழைக்கிறான், சொப்பனத்தைச் சொல்லாவிட்டால் ராஜா கொல்வது நிச்சயமென்கிறான், சேர்ந்து ஜெபத்தில் அமர்கிறான். எவ்வளவு பெரிய பிரச்சனையாக இருந்தாலும், தீர்க்கமுடியாத சவால்களையும் தீர்க்க நம் தேவன் வல்லவர் என்பதை மறக்கவே கூடாது.

**கேள்வி: தானியேல் 2:1-23இல் இரண்டு வகையான ஜெபங்கள் ஏறெடுக்கப்படுகின்றன; அவை என்ன?**

---

இந்த அதிகாரத்தில் இரண்டு வகை ஜெபங்கள் சுட்டிக்காட்டப் படுகின்றன. முதலாவது விண்ணப்ப ஜெபம்; சொப்பனத்தையும் அதன் அர்த்தத்தையும் தேவன் வெளிப்படுத்துமாறு தானியேல் விண்ணப் பிக்கிறான். தானி 2:1-19. இந்த ஜெபத்தில் என்னவெல்லாம் சொன் னார்களெனக் கொடுக்கவில்லை. ஆனால் தானியேலும் அவனுடைய நண்பர்களும் 'பாபிலோனின் மற்ற ஞானிகளோடேகூட அழியாத படிக்கு இந்த மறைபொருளைக் குறித்துப் பரலோகத்தின் தேவனை நோக்கி, இரக்கம்கேட்டார்கள்.' தானி 2:18. அவர்களுடைய விண்ணப் பத்திற்கு தேவன் பதிலளிக்கிறார்; சொப்பனத்தையும் அதன் அர்த்தத் தையும் வெளிப்படுத்துகிறார். நாமும் 'தேவனைநோக்கி இரக்கம் கேட்கும்' நேரங்களிலெல்லாம், தானியேலுக்குக் கொடுத்ததுபோல அசாதாரணவிதத்தில் இல்லாவிட்டாலும் நம் ஜெபங்களுக்கு நிச்சயம் செவிகொடுப்பார்; தானியேலின் தேவன் நம் தேவனாகவும் இருக் கிறார்.

தங்கள் விண்ணப்பத்திற்கு தேவன் பதில் கொடுத்ததற்காக, தானி யேலும் அவன் நண்பர்களும் தேவனைத் துதித்தப் புகழ்ந்து ஜெபிக் கிறார்கள். தேவனே ஞானத்தின் ஊற்றென்றும், இயற்கையையும் அர சியல் நிகழ்யும் கட்டுப்படுத்துகிறவரென்றும் போற்றுகிறார்கள். இங்கு ஒரு முக்கியப் பாடம் உள்ளது. பல விஷயங்களுக்காக தேவனிடம் ஜெபித்து, விண்ணப்பிக்கிறோம்; அவர் நம் ஜெபங்களுக்குப் பதிலளித் ததற்தாக எத்தனை நேரம் துதித்துப் புகழுகிறோம்? மனிதர்களின் நன்றி கெட்ட தன்மைக்கு இயேசு குணமாக்கின 10 குஷ்டரோகிகள்தாம் சரி யான உதாரணம். குணமாக்கப்பட்ட 10 பேரில் 'தேவனை மகிமைப் படுத்துகிறதற்கு' ஒருவன்மட்டுமே திரும்பிவந்தான். லூக்கா 1:18. தானி யேலின் நன்றியறிக்கை, நன்றியறிதலின் முக்கியத்துவத்தை மட்டு மல்ல, தேவனுடைய குணத்தையும் வெளிப்படுத்துகிறது. நமக்கு எது நல்லதோ அதைமட்டுமே தேவன் செய்வாரென நம்பி, நாம் அவரிடம் ஜெபிக்கலாம்; அதற்காக அவரை நாம் துதித்துப் புகழலாம்.

சங்கீதம் 138ஐ வாசியுங்கள். உங்களுடைய சூழ்நிலைகள் எப்படி இருந்தாலும், தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்பதற்கு இந்த நன்றியறிதலின் ஜெபத்தின் மூலம் என்ன கற்றுக் கொள்ளலாம்?

## சிலை: பகுதி I

**கேள்வி: தானியேல் 2:24-30இல் தானியேல் சொல்வதை நாம் ஏன் மறக்கவே கூடாது? யோவான் 15:5ஐயும் வாசிக்கவும்.**

ஜெபத்திற்கு பதில்தரும்விதத்தில், சொப்பனத்தையும் அதன் அர்த்தத்தையும் தேவன் வெளிப்படுத்துகிறார். மறைபொருளுக்கு விளக்கம் சொன்னவர் ‘பரலோகத்தின் தேவன்’ என்று ராஜாவிடம் சொல்ல தானியேல் தயங்கவில்லை. படுக்கையில் படுத்திருந்த ராஜாவுக்கு இனி என்ன நிகழுமோவென்கிற எண்ணமும் கலக்கமும் உண்டாயிற்று. இதை தானியேல் ஞாபகப்படுத்தியது அவனுடைய பேச்சில் நம்பகத்தன்மையை உண்டாக்கியிருக்கும். ஏனென்றால் ராஜாவுக்கு மட்டுமே தெரிந்த விஷயத்தை இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு வல்லமைதானே தானியேலுக்கு வெளிப்படுத்தியிருக்க முடியும். சொப்பனம்பற்றி தானியேல் சொன்ன விளக்கத்தால் இன்னொரு நெருக்கடி நிலையும் உருவாக வாய்ப்பிருந்தது. அதாவது, சொப்பனம்பற்றிய செய்தி நேபுகாத்நேச்சாருக்கு நல்ல செய்தி அல்ல.

**கேள்வி: தானியேல் 2:31-49ஐ வாசிக்கவும். நேபுகாத்நேச்சாருடைய ராஜ்யத்திற்கு இறுதியில் என்ன நிகழவிருந்தது?**

சொப்பனத்தில் பிரமாண்டமான ஒரு சிலை காட்டப்பட்டது; அதன் தலை ‘பசும்பொன்னும், அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும், அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களி மண்ணுமாயிருந்தது.’ தானி 2:32,33. இறுதியில் ஒரு கல் ‘அந்தச் சிலையை அதின் பாதங்களில் மோதி அவைகளை நொறுக்கிப்போட்டது.’ தானி 2:34. சிலை முழுவதும் சுக்குநூறாகி, பறந்துபோகிற பதரைப்போலாயிற்று. ஒவ்வோர் உலோகமும் வரலாற்றில் அடுத்தடுத்த வரவிருந்த ஒவ்வொரு ராஜ்யங்களைச் சுட்டிக்காட்டியதாக தானியேல் சொன்னான். பராக்கிரமத்தோடும் மகிமையோடும் திகழ்ந்த பாபிலோன் வீழும், அதற்குப் பதிலாக வேறொரு ராஜ்யம் தோன்றும். அதைத் தொடர்ந்து வேறு ராஜ்யங்கள் எழும்பும்; இவற்றை எல்லாம் அகற்றிவிட்டு, முற்றிலும் வேறுபட்ட ஒரு ராஜ்யம் தோன்றும்; தேவனுடைய நித்திய ராஜ்யமாகிய அது என்றென்றும் நிலைநிற்கும். இந்தச் செய்தியை நேபுகாத்நேச்சார் தெளிவாகப் புரிந்துகொண்டான்.

மனிதர் சம்பந்தப்பட்ட அனைத்துமே காற்றைப் போலப் பறந்துபோகும். தற்காலிக விஷயங்களாக இருக்கின்றன. இயேசுவில், இயேசுவில்மட்டுமே நமக்குள்ள மிகப்பெரிய நம்பிக்கை இருக்கிறது. பார்க்கவும்: யோவான் 6:54; 2கொரி 4:18.

# சிலை: பகுதி 2

**கேள்வி: சொப்பனத்தையும் அர்த்தத்தையும் வாசியுங்கள். தானி 2:31- 49. உலக வரலாறு பற்றி முன்னரே தேவனுக்குத் தெரியும் என்பதை அவை எவ்வாறு காட்டுகின்றன?**

நேபுகாத்நேச்சார் கண்ட சொப்பனத்தின் தீர்க்கதரிசனம் பொதுவான தீர்க்கதரிசன விளக்கவுரையாகவும், தானி 7,8,11இன் விரிவான தீர்க்கதரிசனங்களை ஆராய்வதற்கான அளவுகோலாகவும் விளங்குகிறது. மேலும் தானியேல் 2 நிபந்தனைத் தீர்க்கதரிசனம் அல்ல. அது காலம் சம்பந்தப்பட்ட தீர்க்கதரிசனம்; நிச்சயமாக நடக்குமென தேவன் முன்னரே கண்டார்; எதிர்காலத்தில் நிச்சயமாக நிறைவேறக்கூடியது.

1 **பொன்னான தலை பாபிலோனைக் குறிக்கிறது** (கி.மு. 626 - 539). பாபிலோன் சாம்ராஜ்யத்தின் அதிகாரத்தையும் செல்வச்செழிப்பையும் பொன்னைவிட சிறப்பாக எடுத்துக்காட்டும் உலோகம் இருக்கமுடியாது. வேதாகமம் அதை 'பொன்னகரி' என்றும் (ஏசா 14:4), 'கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம்' என்றும் சொல்கிறது. எரே 51:7; வெளி 18:16 உடன் ஒப்பிடவும். அந்நகரம் பொன்னால் அலங்கரிக்கப்பட்டிருந்ததாக வரலாற்றாசிரியரான ஹெரோடாடஸ் கூறுகிறார்.

2 **வெள்ளியிலான மார்பும் புயமும் மேதிய-பெர்சியாவைச் சுட்டிக்காட்டுகின்றன.** (கி.மு. 539 - 331). பொன்னைவிட வெள்ளி மதிப்பில் குறைந்தது போல, பாபிலோனின் பிரமாண்டத்தை மேதிய-பெர்சியா எட்டவே இல்லை. மேலும், பெர்சியர்களின் வரிமுறையில் வெள்ளி பயன்படுத்தப்பட்டதால், பெர்சியர்களின் சரியான அடையாளமாக இருந்தது.

3 **வெண்கலத்தாலான வயிறும் தொடைகளும் கிரேக்கத்தைச் சுட்டிக்காட்டின.** (கி.மு. 331-168). கிரேக்கர்களை வெண்கலப் பாத்திர வியாபாரிகளென எசே 27:13 சித்தரிக்கிறது. கிரேக்கர்களின் வெண்கல கவசம் பெயர்போனது. அவர்களுடைய தலைசீராக்களும், கேடயங்களும், போர் கோடாரிகளும் வெண்கலத்தால் செய்யப்பட்டன. 'வெண்கல மனிதர்கள் சமுத்திரத்திலிருந்து வருகிறார்கள்' என்று முன்னுரைக்கப்பட்ட பழமொழி, எகிப்தில் கிரேக்கர்கள் நுழைந்தபோது நிறைவேறியதை முதலாம் ஸாமெடிக்கஸ் கண்டதாக ஹெரோடாடஸ் எழுதுகிறார்.

4 **இரும்பாலான கால்கள் ரோமின் அடையாளங்கள்** (கி.மு. 168- கி.பி. 476). நசுக்கும் ஆற்றல்கொண்ட ரோமை இரும்பு சுட்டிக்காட்டியது. முந்தைய ராஜ்யங்களைவிட வெகுகாலம் நீடித்தது. அந்த ராஜ்யத்தைச் சுட்டிக்காட்டும் மிகச்சிறந்த உலோகமாக இரும்பு இருந்தது.

5 **இரும்பும் களிமண்ணும் பிரிக்கப்பட்ட ஐரோப்பாவைச் சுட்டிக் காட்டுகிறது.** (கி.பி. 476 - கிறிஸ்துவின் இரண்டாம் வருகை). ரோம சாம்ராஜ்யம் கலைந்த பிறகு என்ன நடக்குமென்பதை பாதி இரும்பும் பாதி களிமண்ணும் மிகச் சரியாகச் சுட்டிக்காட்டியது. ஐரோப்பாவை இணைக்க அரசகுலத்தினர் திருமண சம்பந்தம் வைத்தார்கள், ஐரோப்பா யூனியனும் ஏற்படுத்தப்பட்டது, எவ்வளவுதான் முயன்றும் பிரிவினையும் ஒற்றுமையின்மையுமே நிலவியது. தீர்க்கதரிசனத்தின்படி நித்திய ராஜ்யத்தை தேவன் ஸ்தாபிக்கும்வரையிலும் அப்படித்தான் இருக்கும்.

# கல்

**கேள்வி: நம் உலகின் முடிவுபற்றி தானி 2:34,35,44,45 வசனங்கள் சொல்வது என்ன?**

'கடைசிநாட்களில் சம்பவிப்பதை'பற்றி சொப்பனம் சொல்கிறது. தானி 2:28. உலோக (மற்றும் களிமண்) ராஜ்யங்கள் எவ்வளவுதான் அதிராகமும் செல்வச்செழிப்பும் பெற்றிருந்தாலும், கல் ராஜ்யத்தை ஸ்தாபிக்கிற முன்னோடிகளாகமட்டுமே இருந்தன. உலோகமும் களிமண்ணும் ஒரு விதத்தில் மனிதர்கள் உருவாக்குபவைதாம்; ஆனால் கனவில் வந்த கல் மனித கைகள் படாததாகும். அதாவது, முந்தின ராஜ்யங்கள் இறுதியில் முடிவைச் சந்தித்தன; ஆனால் கல் சுட்டிக்காட்டுகிற ராஜ்யம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். கல்லானது தேவனைச் சுட்டிக்காட்டுகிற ஓர் உருவகம். உதாரணமாக, உபா 32:4; 1சாமு 2:2; சங் 18:31. அது மேசியாவைச் சுட்டிக்காட்டுவதும்கூட. சங் 118:22; 1பேதுரு 2:4,7. எனவே, தேவனுடைய நித்திய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டுவதற்கு கல்லைவிட மிகவும் பொருத்தமான அடையாளம் எதுவும் இருக்கமுடியாது.

கல் ராஜ்யமானது இயேசுவின் பூலோக ஊழியத்தின்போதே ஸ்தாபிக்கப்பட்டதென்றும், சுவிசேஷம் உலகெங்கும் அறிவிக்கப்படுவது தேவ ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டதற்கான அடையாளம் என்றும் சிலர் சொல்கிறார்கள். ஆனால் நான்கு முக்கிய ராஜ்யங்கள் வீழ்ந்து, சிலையின் பாதமும் கால்விரல்களும் சுட்டிக்காட்டின பிரிக்கப்பட்ட தேசங்கள் இருக்கும் காலத்தில்தான் கல் ராஜ்யம் வருகிறது. எனவே முதல் நூற்றாண்டில் இந்த ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டதாகச் சொல்ல முடியாது. ஏனென்றால், நான்காம் ராஜ்யமான ரோம் அரசாண்ட காலத்தில்தான் இயேசு பூமியில் ஊழியம்செய்தார்.

அந்தக் கல் பெரிய பர்வதமாயிற்று. 'சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று.' தானி 2:35. இதுபோன்ற ஒரு மலை சீயோன் மலையை ஞாபகப்படுத்துகிறது; அங்குதான் தேவாலயம் இருந்தது; பழைய ஏற்பாட்டுக் காலங்களில் தேவனுடைய பூலோக ராஜ்யத்தின் அடையாளமாக நின்றது. பர்வதத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு கல் பர்வதமாயிற்று. ஏற்கனவே இருந்ததாக வசனம் சொல்கிற அந்தப் பர்வதமானது பரலோக ஆசரிப்புக்கூடாரமான பரலோக சீயோனைத்தான் சுட்டிக்காட்டவேண்டும். கிறிஸ்து தம்முடைய நித்திய ராஜ்யத்தை நிறுவுவதற்கு அங்கிருந்துதான் வரப்போகிறார். பரலோகத்திலிருந்து இறங்கி வரப்போகும் எருசலேமில்தான் இந்த ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவது முற்றுப்பெறும்.

இதுவரையிலும் இருந்த ராஜ்யங்கள் பற்றி தானியேல் 2 மிகச்சரியாகச் சொல்லியுள்ளது. அப்படியானால் வரப்போகிற தேவனுடைய நித்திய ராஜ்யமான இறுதி ராஜ்யம்பற்றி அது சொல்வதையும் நம்புவதுதான் எவ்வாறு பகுத்தறிவான, ஞானமான செயலாக இருக்கும்? அந்தத் தீர்க்கதரிசனத்தை நம்பாதது ஏன் பகுத்தறிவற்ற செயல்?

## மேலும் படிக்க:

தானியேல் 2இல் சொல்லப்படும் சிலையின் பொன்னும் வெள்ளியும் பொருளாதார சக்தியைக் குறிக்கின்றன. வெண்கலமும் இரும்பும் கருவிகளையும் ஆயுதங்களையும் செய்ய பயன்பட்ட உலோகங்கள்; இலக்கியம் மற்றும் வீட்டுஉபயோகம் சார்ந்த நோக்கங்களுக்குப் பயன்பட்டன. எனவே மனிதர்களையும் அவர்களது சாதனைகளையும் அந்தச் சிலை சுட்டிக்காட்டியது. சிலையின் குறிப்பிட்ட உடலுறுப்பு பகுதிகள் அடுத்தடுத்து வரவிருந்த உலக ராஜ்யங்களையும், மனித வரலாற்றின் இறுதியில் நிலவப்போகிற ஒற்றுமையின்மையையும் சுட்டிக்காட்டின. ஆனால் அந்தக் கல்லோ 'கைகளால் பெயர்க்கப்படாதது.' தானி 2:45. தற்காலிகமான இந்த உலகமும் மனிதர்களின் சகல சாதனைகளும் தெய்வீக செயலால்அழிக்கப்படவிருப்பதைஅது வலியுறுத்துகிறது.

"சாதாரணமாகப் பார்க்கும்போது எதிரெதிர் ஆற்றல்களின் ஆடு–புலி ஆட்டத்தால் மனித வரலாறு உருவானதுபோலத் தெரியலாம். இவை அனைத்திற்கும் பின்னணியில் தேவன் நிற்கிறார் என்றும், எது நன்மையோ அதைச் செய்ய அவர் செயல்படுகிறார் என்றும் தானியேல் உறுதிப்படக் கூறுகிறது."

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *உலகின் குழப்பங்களுக்கும் உபத்திரவங்களுக்கும்மத்தியிலும் கடிவாளம் தேவனுடைய கரத்தில் உள்ளது; அவரே அனைத்தையும் மகிமையாக முடியப் பண்ணுவார். அதுவரையிலும், விழுந்துபோன இந்த உலகில் காணப்படுகிற உபத்திரவத்தைப் போக்க என்னென்ன நன்மைகளைச் செய்து நாம் வாழலாம்?*

2 *சிறைப்பட்டிருந்த தானியேலும் மற்றவர்களும் ஓர் அஞ்ஞான தலைவனுடன் நெருக்கமாக, மெய்ப்பற்றுடன் பணிபுரிந்தார்கள்; தானியேலின் ஜனங்களுக்கு மிகுந்த அழிவை ஏற்படுத்தியவனாக அவன் இருந்தாலும்கூட மெய்ப்பற்றுடன் இருந்தார்கள். இதற்கு நாம் என்ன விளக்கம்சொல்லலாம்?*

3 *கைகளால் பெயர்க்கப்படாத கல்லானது உலகத்தில் அறிவிக்கப்பட்டு வரும் சுவிசேஷத்தைச் சுட்டிக்காட்டுவதாக சிலர் சொல்லியிருக்கிறார்கள். அது தவறு என்பதற்கு பல காரணங்களைச் சொல்லலாம்; தானி 2:35யும் அதில் ஒன்று. அந்தக் கல்லானது முந்தின ராஜ்யங்களை நொறுக்கிப்போடும் என்றும், 'அவைகளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவைகளை அடித்துக் கொண்டுபோயிற்று' என்றும் தானி 2:35 சொல்கிறது. சிலுவைக்குப்பிறகு அது நிகழவில்லை. மேலும், அந்தக் கல்லானது சபையைச் சுட்டிக்காட்டுவதாகச் சொல்கிறவர்களும்கூட, மனித ராஜ்யங்களை எல்லாம் அந்தக் கல் நொறுக்கிப்போட்டதை யோசிப்பதில்லை. அந்தக் கல் சுட்டிக்காட்டும் ராஜ்யம் உலகமனைத்தையும் உள்ளடக்கியது. எனவே, அந்தச் சொப்பனத்தின் இறுதி நிகழ்வை இயேசுவின் இரண்டாம் வருகைதான் நிறைவேற்றும். எனவே இயேசுவின் இரண்டாம் வருகையை வைத்துதான் அதற்கு அறிவுப்பூர்வமான விடையைச் சொல்லமுடியும். அதுபற்றி கலந்துரையாடுங்கள்.*